**நாள் 02.02.2024**

**STC No. 417/2023**

**ம.சா.1, திரு.வசந்தகுமார்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நானும் இந்த வழக்கின் எதிரி சீனிவாசனும் சிறு வயதில் இருந்தே நண்பர்கள். இந்த வழக்கை நான் ரூபாய் 4 லட்சம் பணத்திற்காக தாக்கல் செய்துள்ளேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். பதிவு பெறாத நிறுவனமாக தொழில் செய்கிறேன். மாதம்தோறும் எனக்கு ரியல் எஸ்டேட் தொழில் மூலமாக ரூபாய் ஒரு லட்சம் வருமானம் வரும். மேற்படி ரூபாய் ஒரு லட்சம் வருமானத்தில் இருந்து தான் நான் எனது குடும்பத்தை பார்க்கிறேன். என்னுடன் வேலை செய்யும் மூன்று, நான்கு பேருக்கும் சம்பளம் கொடுக்கிறேன். நான் இதுவரை வருமான வரி செலுத்தியது இல்லை. நீங்கள் எதிரிக்கு ரூபாய் 4 லட்சம் கடன் கொடுத்துள்ளதாக கூறியுள்ளீர்கள், அவ்வாறு கடன் கொடுப்பதற்கு உங்களுக்கு போதுமான வருமானம் இல்லை என்றால் சரியல்ல. நீங்கள் கேட்டுக் கொண்டதால் எதிரி சீனிவாசன் உங்களுக்கு Ford Fiesta என்ற காரை Second hand ஆக எடுத்துக் கொடுத்தார் என்றால் இல்லை.

2. மேற்படி Ford Fiesta என்ற காரை நீங்கள் திண்டுக்கல் எடுத்துக்கொண்டு சென்றபோது நீங்கள் ஓட்டிய நிலையில் அந்த

காரானது விபத்திற்குட்பட்டது என்றால் ஆமாம். அப்போது உங்களுடன் அந்த Ford Fiesta காரில் எதிரி வரவில்லை என்றால் ஆமாம். மேற்படி சாலை விபத்தின் காரணமாக அந்த காரில் சேதம் ஏற்பட்டது என்றால் ஆமாம். அந்த கார் ஸ்ரீராம் பைனான்ஸ் நிறுவனத்தில் பைனான்ஸ் செய்யப்பட்டிருந்தது என்றால் எனக்கு தெரியாது. அந்த சமயத்தில் எனக்கு ஸ்ரீராம் பைனான்ஸ் என்ற நிறுவனத்தில் இருந்து போன் பண்ணினார்கள் நான் விபத்துக்குட்பட்டு விட்டது என்று சொன்னேன். இன்சூரன்ஸ் இருப்பதால் கிளைம் செய்து கொள்ளலாம் என சொன்னார்கள். எனக்கு தான் ஸ்ரீராம் பைனான்ஸ் நிறுவனத்தில் இருந்து போன் பண்ணினார்கள். நான் ஓட்டியதால் எனக்கு போன் பண்ணினார்கள். நீங்கள் சாலை விபத்து ஏற்படுத்தியது தொடர்பாக தென்காசி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது.

3. நீங்கள் ஏற்கனவே எதிரிக்கு 08.02.2023 ஆம் தேதி ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி இருந்தீர்கள் என்றால் ஆமாம். புரோ நோட்டு கொடுத்ததால் பணம் திரும்ப கேட்டு அனுப்பினேன். அந்த அறிவிப்பை இந்த வழக்கில் நான் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. சாட்சியிடம் சாட்சிக்காக அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு காண்பிக்கப்பட்டது. சாட்சி அதனை பார்வையிட்டு சரிதான் என கூறினார். (**கடந்த 08.02.2023 ஆம்**

**தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) மேற்படி நீங்கள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிரி தரப்பில் பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் ஆமாம். எனது வழக்கறிஞர் என்னிடம் சொன்னார். போலியாக நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாக அவர் பதில் அறிவிப்பு கொடுத்ததாகச் சொன்னார். சாட்சியிடம் பதில் அறிவிப்பு காண்பிக்கப்பட்டது. சாட்சி அது வழக்கறிஞரிடம் இருந்தது நான் பார்க்கவில்லை என கூறினார். மேற்படி பதில் அறிவிப்பையும் நீங்கள் இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. கடந்த 06.04.2023 ஆம் தேதி மீண்டும் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு அனுப்பினீர்கள் என்றால் ஆமாம். மேற்படி அறிவிப்பில் நீங்களும், நவநீத கிருஷ்ணன் என்பவரும், முத்துவேல் என்பவரும் எதிரியின் வீட்டிற்கு சென்றதாகவும், அப்போது எதிரி அவர் கொடுத்ததாக சொல்லும் புரோ நோட்டை வாங்கிக்கொண்டு காசோலை கொடுத்ததாக கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். பொதுவாக உங்களுக்கும், எதிரிக்கும் மேற்படி வழக்கறிஞர் அறிவிப்புகள் ஏற்கனவே அனுப்பப்பட்டு பதில் அறிவிப்பும் அனுப்பப்பட்டு பிரச்சனை இருக்கும் நிலையில் நீங்கள் கூறியுள்ளது போன்று எதிரியின் வீட்டில் சென்று புரோ நோட்டை கொடுத்துவிட்டு அந்த புரோ நோட்டிற்கு பதிலாக எதிரி

உங்களுக்கு காசோலை கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் அண்ணன் கூப்பிட்டு பேசியதால்தான் நாங்கள் அவ்வாறு சென்றோம்.

5. வழக்கு காசோலையின் வங்கி கணக்கு நிறுத்தப்பட்டதால் தான் உங்களுக்கு காசோலை திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி உங்களுக்கு சிறு வயதில் இருந்தே நண்பர் என்பதால் அனைத்து விஷயங்களும் உங்களுக்குள் கலந்துரையாடல் இருக்கும் என்றால் ஆமாம். எதிரி சீனிவாசன் Ford Fiesta காரை வாங்கிய சமயத்தில் உங்களிடம் கைமாத்தாக ரூபாய் ஒரு லட்சம் வாங்கியிருந்தார் என்றால் இல்லை. மேற்படி ரூபாய் ஒரு லட்சம் வாங்கியதற்கு தொடக்கத்திலேயே ரூபாய் 20,000/-ம் செலுத்தி விட்டார் என்றும், அதன் பின்னர் G-pay மூலம் பல தடவை உங்களுக்கு உங்களிடம் இருந்து வாங்கிய பணத்தை எதிரி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. சாட்சியிடம் எதிரி அவரது மனைவியின் கணக்கில் இருந்து உங்களுக்கு G-pay மூலம் ஆயிரம் ரூபாய். இரண்டாயிரம் என பலமுறை பணம் செலுத்தியுள்ளார் என்று G-pay மூலம் பணம் செலுத்தப்பட்டதற்கான அத்தாட்சி நகல்கள் .... காண்பிக்கப்பட்டது. சாட்சி அதனை பார்வையிட்டு சரிதான் எனக் கூறினார். பலமுறை ரூபாய் 1000, 2000, 5000/- என திருப்பி செலுத்தியுள்ளார் என கூறினார்.

6. எதிரி உங்களுக்கு அனுப்பிய பதில் அறிவிப்பில் ரூபாய் 20,000/-ம் உங்களுக்கு செலுத்தியிருந்ததாக குறிப்பிட்டுருந்தார் என்றும், அதற்கு நீங்கள் எந்த மறுப்பு அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான். எதிரியின் மனைவி அந்த ரூ.20,000/-ம் பணத்தை வட்டிக்காக வைத்துக் கொள்ளுங்கள் என சொல்லி போட்டுவிட்டது ஆகும். திண்டுக்கல்லில் நீங்கள் காரை ஓட்டி சென்று விபத்து ஏற்படுத்தியது தொடர்பாக எதிரி சீனிவாசனுக்கு நீங்கள் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். அதற்கு இன்சூரன்ஸ் இருக்கிறது என்பதால் நான் எதுவும் கொடுக்கவில்லை. இந்த விபத்து தொடர்பான வழக்கு தென்காசி நீதிமன்றத்தில் நடந்து வருவது தொடர்பாக எதிரி உங்களிடம் கேட்டதால் உங்களுக்கும், எதிரிக்கும் ஏற்பட்ட மனக்கசப்பின் காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. ஏற்கனவே நீங்கள் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அவர் அனுப்பிய பதில் அறிவிப்பு ஆகியவற்றை இந்த வழக்கில் தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

7. நீங்கள் வேண்டுமென்றே போலியாக ஆவணங்களை தயார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றும், ஏற்கனவே உங்களிடம் பெற்ற பணத்தை எதிரி திருப்பி செலுத்திவிட்டார் என்றும், அதற்காக நீங்கள் வாங்கிக் கொண்ட

காசோலையை வைத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. காசோலையில் நீங்கள் குறிப்பிட்டுள்ளவாறு ரூபாய் 4 லட்சம் பணம் கொடுப்பதற்கு வசதி, வாய்ப்பு இல்லை என்றும், எதிரிக்கும் அதை வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், நீங்கள் உண்மையில் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு கொடுப்பதற்கு வசதி, வாய்ப்பு உள்ளது. எனது வீட்டு வாடகை மட்டுமே மாதம் ரூ.30,000/–ம் வருகிறது. மேற்படி வாடகையை காட்டுவதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்காக வழக்கு மூலத்திற்கு தான் நீங்கள் 06.04.2023–ம் தேதி நீங்களும், மற்ற இருவரும் சென்று புரோநோட்டை கொடுத்துவிட்டு காசோலை வாங்கியதாக பொய்யாக கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

திறந்த நீதி மன்றத்தில் சாட்சி என் முன்பாக சாட்சியம் அளித்து தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பிக்கபட்டு சரி என சாட்சியால் ஒப்பு கொண்டு கையொப்பம் செய்யப்பட்டது.

Sd/–M.Sunil Raja,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
செங்கோட்டை.